ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை
අති විශෙෂ அதி விசேஷமானது

අංක 2367/08 - 2024 ජනවාරි මස 18 වැනි බ්‍රහස්පතින්දා - 2024.01.18
**2367/08 ஆம் இலக்கம் - 2024 ஆம் ஆண்டு சனவரி மாதம் 18 ஆந் திகதி வியாழக்கிழமை**

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி III - காணிகள்

## காணி மீட்டல் பற்றிய அறிவித்தல்கள்

**காணி எடுத்தற் சட்டம் (அத்தியாயம் 460)**

*39 (அ) (1) ஆம் பிரிவின் கீழான கட்டளை*

*2014, நவெம்பர் மாதம் 07 ஆம் திகதிய 1887/41 ஆம் இலக்க இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அதிவிசேட வர்த்தமானியில் (அத்தியாயம் 460) காணி எடுத்தற் சட்டத்தின் 38 ஆம் பிரிவின் காப்புவாசகம் (அ) வின் கீழ் பிரசுரிக்கப்பட்ட 2014 ஆம் ஆண்டின் 308 ஆம் இலக்க கட்டளையில் குறிப்பிட்ட காணித் துண்டுகளினை முழுமையாக அரசுரித்தாக்கப்பட்டுள்ளதோடு, அரசின் சார்பில் அச் சட்டத்தின் 40 ஆம் பிரிவின் (அ) பந்தியின் கீழ் இக் காணித் துண்டுகளின் உடைமையும் பொறுப்பேற்கப்பட்டுள்ளன. எனினும், அச் சட்டத்தின் (1979 ஆம் ஆண்டின் 8 ஆம் இலக்கச் சட்டத்தினால் உட்புகுத்தப்பட்ட) 39 (அ) ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவினால் எனக்களிக்கப்பட்ட தத்துவங்களின் பிரகாரம், சுற்றுலாத்துறை மற்றும் காணி அமைச்சர் நாலக்க ஜுட் ஹரின் பெர்னாண்டோ ஆகிய நான், குறித்த காணித் துண்டுகளில் கீழ்வரும் அட்டவணையில் விபரிக்கப்பட்ட காணித் துண்டினை இக் கட்டளை மூலம் உரித்து நீக்குகின்றேன்.*

ஹரின் பெர்னாண்டோ,
*சுற்றுலாத்துறை மற்றும் காணி அமைச்சர்.*

எனது இல. : 4-3/10/2012/LRB/324 II
காணி எடுத்தல் உத்தியோகத்தர் இல. : WGSWD&EIP/ACQ/KB/16.

சுற்றுலாத்துறை மற்றும் காணி அமைச்சு,
"மிஹிகத்த மெதுர", காணிச் செயலகம்,
இல. 1200/6, இரஜமல்வத்தை வீதி,
பத்தரமுல்லை,
*2024, சனவரி 04.*

**அட்டவணை**

மேல் மாகாணம், கொழும்பு மாவட்டம், கெஸ்பேவ பிரதேச செயலாளர் பிரிவில், இல. 576 A - தும்போவில வடக்கு கிராம அலுவலர் பிரிவில் தும்போவில கிராமத்தில் அமைந்துள்ள நில அளவையாளர் நாயகத்தினால் தயாரிக்கப்பட்ட 2016.05.23 ஆம் திகதிய, 521203 ஆம் இலக்க கடத்திரள் வரைபடத்தில் தொகுதி இல. 17 இன் 02 தொகுதி, தாள் இல. 04 இல் விபரமாக காட்டப்பட்ட பின்வரும் பெயர், விஸ்தீரணத்தைக் கொண்ட காணித் துண்டின் எல்லைகள்:

**1. துண்டு இல. 487 - ஒருவலஓவிட்ட - விஸ்தீரணம்: 0.0651 ஹெக்டயார்**
வடக்கு: துண்டு இல. 485 மற்றும் 74; கிழக்கு: துண்டு இல.74 மற்றும் 488; தெற்கு: துண்டு இல.488, 489 மற்றும் 490;மேற்கு: துண்டு இல. 486.

EOG 01 - 0127

---

**காணி எடுத்தற் சட்டம் (அத்தியாயம் 460)**

*39 (1) ஆம் பிரிவின் கீழ் இரத்துச் செய்தல்*

காணி எடுத்தற் சட்டத்தின் 38 ஆம் பிரிவின் காப்புவாசகம் (அ) வின் கீழான கட்டளையில் விபரிக்கப்பட்ட 2014.11.07 ஆம் திகதிய 1887/41 ஆம் இலக்க இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அதிவிசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட



*இவ் அதிவிஷேட வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

2014 ஆம் ஆண்டின் 308 ஆம் இலக்க 2014.10.31 ஆம் திகதிய கட்டளைச் சட்டத்தில் விபரிக்கப்பட்ட காணித் துண்டு இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசுக்கு ஒதுக்கப்பட்டுள்ளது. கீழே விபரிக்கப்பட்ட காணித் துண்டின் இருப்பாட்சி இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் சார்பில் இன்னும் பொறுப்பேற்கப்படவில்லை. ஆகையால், சுற்றுலாத்துறை மற்றும் காணி அமைச்சர் நாலக்க ஜூட் ஹரின் பெர்னாண்டோ ஆகிய நான், காணி எடுத்தற் சட்டத்தின் 39(1) ஆம் பிரிவின் கீழ் எனக்கு அளிக்கப்பட்ட தத்துவங்களின் பிரகாரம் 2014.11.07 ஆம் திகதிய 1887/41 ஆம் இலக்க இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அதிவிசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட 2014 ஆம் ஆண்டின் 308 ஆம் இலக்க 2014.10.31 ஆம் திகதிய இக் கட்டளையை இத்தால் இரத்துச் செய்கிறேன்.

ஹரின் பெர்னாண்டோ,
சுற்றுலாத்துறை மற்றும் காணி அமைச்சர்.

எனது இல. : 4-3/10/2012/LRB/324 - II
பிரதேச செயலாளர் இல. : WGSWD&EIP/ACQ/KB/16.
சுற்றுலாத்துறை மற்றும் காணி அமைச்சு,
"மிஹிகத்த மெதுர", காணிச் செயலகம்,
இல. 1200/6, இரஜமல்வத்தை வீதி,
பத்தரமுல்லை,
2024, சனவரி 04.

**அட்டவணை**

மேல் மாகாணம், கொழும்பு மாவட்டம், கெஸ்பேவ பிரதேச செயலாளர் பிரிவில், 576 B - தும்போவில தெற்கு கிராம அலுவலர் பிரிவில் தும்போவில கிராமத்தில் அமைந்துள்ள, நில அளவையாளர் நாயத்தினால் தயாரிக்கப்பட்ட இல. 521203, 2016.01.05 ஆம் திகதிய கடத்திரள் வரைபடத்தில் தொகுதி இல. 18 இன் 06 ஆம் தொகுதியில் தாள் இல. 5 இல் விபரமாக காட்டப்பட்ட பின்வரும் பெயர், விஸ்தீரணத்தைக் கொண்ட காணித் துண்டின் எல்லைகள்:

**1. துண்டு இல. 426 - அம்பகஹஓவிட்ட - விஸ்தீரணம்: 0.0526 ஹெக்டயார்**

வடக்கு: தொகுதி இல. 7 துண்டு இல. 91 மற்றும் 425; கிழக்கு: துண்டு இல. 425 மற்றும் 4 ; தெற்கு: துண்டு இல.20, 19 மற்றும் 29 ; மேற்கு: துண்டு இல. 27 மற்றும் 25.

EOG 01 - 0128

---

**காணி எடுத்தற் சட்டம் (அத்தியாயம் 460)**

39 (1) ஆம் பிரிவின் கீழ் இரத்துச் செய்தல்

காணி எடுத்தற் சட்டத்தின் 38 ஆம் பிரிவின் காப்புவாசகம் (அ) வின் கீழான கட்டளையில் விபரிக்கப்பட்ட 2022.11.18 ஆம் திகதிய 2306/74 ஆம் இலக்க இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அதிவிசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட 2022 ஆம் ஆண்டின் 156 ஆம் இலக்க 2022.11.11 ஆம் திகதிய கட்டளைச் சட்டத்தில் விபரிக்கப்பட்ட காணித் துண்டு இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசுக்கு ஒதுக்கப்பட்டுள்ளது. கீழே விபரிக்கப்பட்ட காணித் துண்டின் இருப்பாட்சி இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் சார்பில் இன்னும் பொறுப்பேற்கப்படவில்லை. ஆகையால், சுற்றுலாத்துறை மற்றும் காணி அமைச்சர் நாலக்க ஜூட் ஹரின் பெர்னாண்டோ ஆகிய நான், காணி எடுத்தற் சட்டத்தின் 39(1) ஆம் பிரிவின் கீழ் எனக்கு அளிக்கப்பட்ட தத்துவங்களின் பிரகாரம் 2022.11.18 ஆம் திகதிய 2306/74 ஆம் இலக்க இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அதிவிசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட 2021 ஆம் ஆண்டின் 156 ஆம் இலக்க 2022.11.11 ஆம் திகதிய இக் கட்டளையை இத்தால் இரத்துச் செய்கிறேன்.

ஹரின் பெர்னாண்டோ,
சுற்றுலாத்துறை மற்றும் காணி அமைச்சர்.

எனது இல. : 4-3/8/2012/LRB/95
பிரதேச செயலாளர் இல. : WGSWD&EIP/ACQ/DW/03.
சுற்றுலாத்துறை மற்றும் காணி அமைச்சு,
"மிஹிகத்த மெதுர", காணிச் செயலகம்,
இல. 1200/6, இரஜமல்வத்தை வீதி,
பத்தரமுல்லை,
2024, சனவரி 04.

**அட்டவணை**

மேல் மாகாணம், கொழும்பு மாவட்டம், தெஹிவளை பிரதேச செயலாளர் பிரிவில் கொஹுவல (தெஹிவளை கல்கிஸ்ஸ நகரசபை எல்லையினுள்) கிராமத்தில் அமைந்துள்ள, நில அளவையாளர் நாயகத்தினால் தயாரிக்கப்பட்ட 2015.09.16 ஆம் திகதிய, CO/DSO/2015/550 ஆம் இலக்க வரைபடத்தில் விபரமாக காட்டப்பட்ட பின்வரும் பெயர், விஸ்தீரணத்தைக் கொண்ட காணித் துண்டின் எல்லைகள் :

**1. துண்டு இல. 8 - கொட்டுவே கும்புர மற்றும் பிரியன் கரயாகே கும்புர - விஸ்தீரணம்: 0.1640 ஹெக்டயார்**

வடக்கு: இந்த வரைபடத்தின் துண்டு இல. 7 மற்றும் 1; கிழக்கு: மெல்டர்பிளேஸ் வரி மதிப்பீட்டு இலக்கம் மற்றும் உரிமைகோருவோர் கண்டுபிடிக்க முடியாத காணி ; தெற்கு: இந்த வரைபடத்தின் துண்டு இல. 10 மற்றும் 9 ; மேற்கு: இந்த வரைபடத்தின் துண்டு இல. 9, சுனேத்ரா தேவி வீதியின் வரி மதிப்பீட்டு இல. 65/2 ஐ கொண்ட காணி, சுனேத்ரா தேவி வீதியின் வரி மதிப்பீட்டு இலக்கம் மற்றும் உரிமைகோருவோர் கண்டுபிடிக்க முடியாத காணி, வீதி, சுனேத்ரா தேவி வீதியின் வரி மதிப்பீட்டு இலக்கம் மற்றும் உரிமைகோருவோர் கண்டு பிடிக்க முடியாத காணி, சுனேத்ரா தேவி வீதியின் வரி மதிப்பீட்டு இல. 57/1A ஐ கொண்ட காணி.

EOG 01 - 0129

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் அச்சிடப்பட்டது.